முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 18.08.2025

O.S. 90/2018

வா.சா. 2- ஜெபின் ஜினோ

2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) நான் எனது அப்பாவுடன் எப்போதாவது சேர்ந்து வாழ்ந்துள்ளேனா என்றால் வாழ்ந்துள்ளேன். எப்போது வாழ்ந்தேன் என்றால் 2005 ஆண்டு வரை. நானும் எனது அம்மாவும் 2005 ஆம் ஆண்டு வரை எனது அப்பாவுடன் சேர்ந்து வாழ்ந்தோம். அதன் பின்பு எனது அப்பாவோடு தொடர்பு உண்டா என்றால் பெரிய அளவில் தொடர்பு இல்லை. எனது அப்பாவை கோவை கேர் சென்டரில் சேர்த்து மருத்துவ கிச்சை கொடுத்ததாவ சொல்வதற்கு ஆவணம் இருக்கிறதா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2) நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் நான் கேர் சென்டரில் சேர்த்ததாக ஆவணம் துலங்குமா என்றால் துலங்கும். வா.சா.ஆ.21 வது ஆவணத்தில் 2018 ம் ஆண்டில் கோவை மது அடிமைகள் மறுவாழ்வு சென்டரில் எனது அப்பாவிற்கு சிகிச்சை அளித்ததாக உள்ளது என்றால் சரி.

3) அதில் மன நலத்திற்கு சிகிச்சை எடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ. 2 ஆவணத்தில் 2, 3 பிரதிவாதிகளின் கிரய ஆவணம் என்றால் சரியாகும். அதில்எனது அப்பா அகஸ்டீன் செல்வகுமார் என்று கையொப்பாம் செய்து தமிழில் எழுதியுள்ளார் என்றால் எனது அப்பாவின் கையொப்பமும் கையொழுத்தும் எனக்கு ஞாபகம் இல்லை.

4) வா.சா.ஆ.2 ல் 7 ம் பக்கத்தில் எனது அப்பாவின் ஓட்டுநர் உரிமம் சரிபார்க்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது . எனது அப்பாவை கட்டாயப்படுத்தி யாராவது கையொப்பம் செய்திருக்கலாம். பிரதிவாதிகள் தாக்கல் செய்த

எதிர்வழக்குரையை படித்து பார்த்தேன் அதனோடு தாக்கல் செய்த ஆவணங்களை எனக்கு ஞாபகம் இல்லை. எனது அப்பா வாகனத்தை இயக்கியதாக பிரதிவாதிகள் ஆவணங்கள் தாக்கல் செய்ததை கேள்விப்பட்டதாக சாட்சி கூறிவிட்டு தற்போது தெரியவில்லை என்று கூறுகிறார்.

5) எனது முதல்விசாரணையில் 5 வது பத்தியில் எனது அப்பாவிற்கு 2003 லிருந்து மனநலம் சரியில்லை என்று எனது பாட்டி என்னிடம் கூறியுள்ளதாக நான் கூறியுள்ள விபரம் சரி.எனது அப்பா 2003 ம் வருடம் ஓய்வு பெற்றார். எனது அப்பாவிற்கு மனநலம் சரியயில்லததால் அவரை வேலையை விட்டு நீக்கம் செய்தார்களா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

6) எனது சிறு வயது முதலே என்னையும் எனது அம்மாவையும் அடித்து சித்தரவதை செய்தார் எனது அப்பா. இரவில் திடீர் என எழுந்து எங்களை கட்டையை வைத்து அடிப்பார் இது போல் வினோதமாக நடந்து கொள்வார். அப்போதெல்லாம் அவருக்கு மனநலம் மருத்துவம் கொடுத்தோமா என்றால் 2004 லிருந்து 2008 வரை உள்நோயாளியாக வைத்து சிகிச்சை கொடுத்தோம். அதற்காக என்ன ஆவணம் தாக்கல் செய்தோம் என்றால் மருத்துவசீட்டும் , மருத்துவ சான்றிதழும் தாக்கல்செய்தோம்.

7) வா.சா.ஆ.5 மருத்துவசீட்டு என்றால் சரி. அதில் மருத்துவ சான்று உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.5 ல் குறிப்பிட்டுள்ள மருந்துகள் அனைத்தும் எந்த நோய்கு கொடுக்கப்பட்டது என்றால் மனநலம் சார்ந்து கொடுக்கப்பட்ட மருந்துகள் என்று எனது பாட்டி என்னிடம் கூறியுள்ளார். எனது பாட்டி மருத்துவத்திற்கு படித்தாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.5 ல் உள்ள விபரங்களை அதை பரிந்துரைத்த மருத்துவரை விசாரித்தால் தான் தெரியும் .

8) எனது அப்பா 2003 ல் நல்ல மனநலத்தோடு இருந்தார் என்றாலும் அதனால்தான் அவர் இராணுவத்தில் வேலைப்பார்த்தார் என்றாலும் நான் வழக்கிற்காக அவருக்கு மனநலம் சரியில்லை என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 20.01.2017 ம் தேதி வழக்கு சொத்தை குறித்து நேரடியாக எனது அப்பாவிடம் கேட்டதாகவும் அப்போது எனது அப்பா மறுத்துவிட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா சுய சிந்தனையோடு இருந்ததால் தான் எங்கள் அப்பாவிடம் நேரடியாக சென்று கேட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் கிருஸ்தவ மதத்தை சேர்ந்தவர்கள் என்பதால் சட்டப்படி மூதாதையர் சொத்து என்ற கோட்பாடு இல்லை என்றால் சரியல்ல.

9) இந்திய வாரிசுரிமை சட்டம் தான் பொருந்தும் என்றாலும் அதில் 1ம் பிரதிவாதி அவருக்கு உரிமைப்பட்ட சொத்தை அவரது விருப்பப்படி எழுதிக்கொடுக்கலாம் என்றால் சரியல்ல. அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகளிடம் இருந்து உரிய கிரய தொகையை பெற்று கொண்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. அவர் நல்ல மனநிலையில் இருந்ததால் தான் ஆவணம் பதியப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரயம் எழுதிக்கொடுத்த பின்பு எங்களை தற்போது தூண்டுவிட்டு உண்மைக்கு புறம்பான காரணத்தை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

1) 1ம் பிரதிவாதியின் அம்மா சொல்லி விபரங்கள் தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. நான் எப்போது எனது பாட்டியை சுமார் 3 வருடத்திற்கு முன்பு சந்தித்துள்ளேன். சரியான தேதி எனக்கு ஞாபகம் இல்லை. எனது பாட்டி இறந்த வருடம் தேதி மாதம் எனக்கு ஞபாகம் இல்லை. உண்மையில் எனது பாட்டியிடம் இருந்து தகவலை

பெறவில்லை என்றாலும் வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மனநலம் பாதிக்கப்பட்டதாக தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எனது அப்பா எனது அம்மாவோடு சேர்ந்து வாழ வழக்கறிஞர் அறிவிப்பு செய்தார் என்றால் எனக்கு ஞபாகம் இல்லை.

2) எனது அம்மா அவரது பதிலறிவிப்பில் எனது அப்பா மனநலம் பாதிக்கப்பட்டவர் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. வழக்கின் ஆவணங்கள் படியும் பிராதின் படியும் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.